**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No.418/2018 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 3 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. ராமசுப்பு |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

1 ம் எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of July 2025.

நான் சீவலப்பேரியில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா. எதிரிகளை தெரியும். என்னுடைய உறவினர்கள். வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 14.01.2018 ம் தேதி ஈஸ்வரியம்மன் கோவில் தச்சு பட்டறை அருகே அ.சா.1 நின்றுகொண்டிருந்தபோது கல்வெட்டில் பெயர் பதிப்பதன் சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சனையில் எதிரிகள் அனைவரும் சட்டவிரோதமாக ஒன்றுகூடி அ.சா.1 யை கெட்ட வார்த்தையில் பேசி, அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும், பல்லை உடைத்துவிட்டதாகவும் கொன்றுவிடுவோம் என மிரட்டி மரணபயம் ஏற்படுத்தியதாகவும்,

சம்பவத்தை நீங்கள் நேரில் பார்த்ததாகவும், போலிசாரிடம் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகள் உறவினர்கள் என்பதால் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.418/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | திருமதி. பேச்சியம்மாள் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

1 ம் எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of July 2025.

நான் மூலைக்கரைப்பட்டியில் வசித்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய கணவர். 1ம் எதிரியை தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. 2001ம் ஆண்டு நான் வீட்டில் பொங்கல் வைத்துக்கொண்டிருந்தேன் வெளியே சென்றிருந்த கணவர் இரத்தக்காயத்துடன் வந்தார். நான் காயம் எப்படி வந்தது என கேட்டேன். என்னை சண்முகம் மூக்கில் குத்திவிட்டதாக கூறினார். என்னை காவல்நிலையம் வர சொல்லி அ.சா.1 அழைத்தார். நான் காவல்நிலையம் செல்லவில்லை. கோவில் சம்பந்தமாக உள்ள பிரச்சனையில் எதிரி அ.சா.1 யை அடித்ததாக கூறினார். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் நான் பார்த்தேன். சம்பவம் நடந்த இடத்திற்கும் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் நீதிமன்றம் முன்புறம் கேட்டிலிருந்து நீதிமன்றம் அறை

வரையுள்ள தூரம் இருக்கும். எனக்கும் எதிரிகளுக்கும் ஒரே கோவில் என்றால் சரிதான். எனக்கும் எதிரிகளுக்கும் சாமி கும்பிடுவதற்கு ஒரே கூடம் என்றால் சரிதான். கூடத்தில் மண்டபம் கட்டுவதற்கு எதிரிகளுக்கும் எனது கணவருக்கும் பிரச்சனை உள்ளது என்றால் இல்லை. நான் சொல்வது போல கூடம் கட்டுவதன் சம்பந்தமாக உள்ள பிரச்சனை சம்பந்தமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மகன் சீவலப்பேரில் உள்ளார் என்றால் சரிதான். சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் சம்பவம் 4 அல்லது 4.30 மணியளவில் நடந்திருக்கும். எனது கணவர் காவல்நிலையத்திற்கு சென்றார் என்றால் சரிதான். நான் சொல்வது போல சம்பவம் நடந்த அன்று ஊரில் இல்லை என்றும், சீவலப்பேரில் எனது மகன் வீட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றும், எனது கணவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் வீட்டில் வழுக்கி விழுந்ததால் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவர் மருத்துவமனைக்கு சென்றாரா என்றால் உள்ளூரில் உள்ள மருத்துவமனைக்கு சென்றார்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No.418/2018 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 1 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. பொன்னையா |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

1 ம் எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of July 2025.

நான் மூலைக்கரைப்பட்டியில் வசித்து வருகிறேன். கூழ் கடை நடத்தி வருகிறேன். எதிரிகளை தெரியும். என்னுடைய ஊர்க்காரர்கள். நான் 2018 ம் ஆண்டு ஒன்றவாது மாதம் தேதி ஞாபகமில்லை பொங்கலன்று மூலைக்கரைப்பட்டி வந்தேன். ஈஸ்வரியம்மன் கோவிலில் நின்றுகொண்டிருந்தேன். என்னுடைய கைரேகையை போலீஸார் ஒரு தாளில் வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என எனக்கு தெரியாது. புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.1** ஆகும். வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

எதிரிகள் உங்களுடன் உடன்பிறந்தவர்கள் மற்றும் உறவினர்கள் என்பதால்தான் 14.01.2018 ம் தேதி ஈஸ்வரியம்மன் கோவில் தச்சு பட்டறை

அருகே நீங்கள் நின்றுகொண்டிருந்தபோது கல்வெட்டில் பெயர் பதிப்பதன் சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சனையில் எதிரிகள் அனைவரும் சட்டவிரோதமாக ஒன்றுகூடி உங்களை கெட்ட வார்த்தையில் பேசி, அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும், பல்லை உடைத்துவிட்டதாகவும் கொன்றுவிடுவோம் என மிரட்டி மரணபயம் ஏற்படுத்தியதாகவும், போலிசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்துவிட்டு, விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகள் உறவினர்கள் என்பதால் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.